தமிழியல் ஆய்வில் பேராசிரியர் க. கணபதிப்பிள்ளையின் வகிபாகம்

பேராசிரியர் செல்வரஞ்சிதம் சிவசுப்பிரமணியம்
தமிழ்த்துறை, கலைப்பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
mssivasubramaniam@gmail.com

அறிமுகம்

தமிழுக்குத் தொண்டாற்றிய இலங்கைத் தமிழ்ப் பேராசிரியர்களில் க. கணபதிப் பிள்ளை அவர்கள் மிக முக்கியமானவர். இவர் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் இரண்டாவது தமிழ்ப் பேராசிரியர். இவரை மையமாகக் கொண்டு பல்கலைக்கழக புலமை மரபு உருவாக்கப்பட்டது. பேராசிரியர் தலைசிறந்த ஆராய்ச்சியாளன், ஆராய்ச்சி மாணவர்களுக்கு புலமைசார் வழிகாட்டியாகத் திகழ்ந்தார். தமிழ்ப்புலமை உருவாக்கத்திலே சுவாமி விபுலானந்தர், பேராசிரியர். க. கணபதிப்பிள்ளை, பேராசிரியர். வி. செல்வநாயகம், பேராசிரியர். சு. வித்தியானந்தன் போன்றோர் மிக முக்கியமானவர்களாக திகழ்ந்தனர். இவர்கள் பல்கலைக்கழகப் பாடத்திட்டத்தை அறிமுகப்படுத்தி, அந்தந்தத் துறையில் புலமையாளர்களை வழிப்படுத்தி நெறிப்படுத்தினர். இவர்கள் உருவாக்கிய தமிழ்ப் புலமையாளர்களே தமிழ்த்துறை வளர்ச்சிக்கு வித்திட்டவர்கள். ஐம்பதாவது ஆண்டு தமிழ்த்துறை வளர்ச்சியின் ஆரம்ப கர்த்தாக்கள். பேராதனைப் பல்கலைக்கழகம் உருவாக்கிய புலமையாளர்களே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் புலமை மரபை வளர்த்தெடுத்தவர்கள். இவ்விடத்தில் பேராசிரியர். சு. வித்தியானந்தன் பேராசிரியர் க. கைலாசபதி, பேராசிரியர் கா. சிவத்தம்பி, பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை, பேராசிரியர் அ. சண்முகதாஸ் போன்றோர் பேராதனை வளாகத்திலிருந்து யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைக்கு வந்து பணியாற்றியவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை பருத்தித்துறையைச் சேர்ந்த தும்பளை எனும் கிராமத்தில் பிறந்தார். (02.07.1903). மு. முத்துக்குமாரசாமிக் குருக்களிடம் மரபுவழித் தமிழ், சமஸ்கிருதக் கல்வியைப் பெற்றார். பருத்தித்துறையிலுள்ள ஹாட்லிக் கல்லூரியிலே ஆங்கிலவழிக் கல்வியைப் பெற்றுக்கொண்டார். பாடசாலைக் கல்வியின் பின்னர் பல்கலைக் கல்வியைப்பெற இலங்கைப் பல்கலைக்கழக

கல்லூரியில் சேர்ந்தார். (1927). சங்கத (சமஸ்கிருதம்) மொழியைக் கற்று முதல்வகுப்பில் சித்தியடைந்தார். புலமைப் பரிசில் பெற்று அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்குச் சென்று தமிழாய்வின் ஆழ அகலங்களைக் கற்றுக்கொண்டார். பின்னர் லண்டன் பல்கலைக்கழகத்துக்குக் கீழைத்தேய ஆபிரிக்க ஆய்வுப் பள்ளிக்குச் சென்றார். அங்கு பேராசிரியர் ஆர். எல். ரேணரிடம் சாசனவியல் பற்றி ஆய்வு செய்து கலாநிதிப்பட்டத்தினைப் பெற்றுக்கொண்டார். கி. பி. ஏழாம், எட்டாம் நூற்றாண்டுகளுக்குரிய தமிழ்க் கல்வெட்டுக்களின் மொழிநடை பற்றி ஆய்வுசெய்து கலாநிதிப் பட்டத்தினைப் பெற்றுக்கொண்டார். இவர்தான் முதன் முதல் சாசனவியலிலே முனைவர் பட்டம் பெற்ற முதல் ஆய்வாளர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இரண்டாம் கஜபாகு காலத்து மாங்கனாய்த் தமிழகக் கல்வெட்டும், மொறஹகவெல தூண் கல்வெட்டும், நிஸங்கமல்லனின் பாண்டுவஸ்நுவர தமிழ்க் கல்வெட்டுக்கள் பற்றி ஆய்வுகளை எழுதியுள்ளார். கல்வெட்டாய்வில் பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளையை வழிநடத்தியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்களை சங்க இலக்கியத்தில் ஆய்வுசெய்யும்படி வழிகாட்டி நெறிப்படுத்தியவரும் பேராசிரியரே. பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்களை மொழியியல் ஆய்வில் வழிகாட்டி நெறிப்படுத்தியவர். மேலும் பேராசிரியர் க. கைலாசபதி, பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்களையும் விமர்சனத் துறையில் வழிகாட்டியவரும் பேராசிரியரே. இவ்வாறு தமிழியல் புலத்தில் புலமையாளர்களான தமிழ்ப் பேராசிரியர்களை உருவாக்கியவர். அத்தகைய பேராசிரியரின் தமிழியல் ஆய்வுப் பணிகளை ஆய்வு செய்வதே இவ்வாய்யிவனுடைய நோக்கமாகும்.

பேராசிரியர் கணபதிப்பிள்ளையவர்கள் ஒரு மொழியியலாளர், கட்டுரையாசிரியர், நாடகாசிரியர், கவிதையாசிரியர், பண்பாட்டாசிரியர், நாவலாசிரியர் எனப் பன்முகப்பட்ட வளர்ச்சியுடையவராகத் திகழ்ந்தார். இத்தகைய பேராசிரியரின் சிறப்பைக் கூறும்போது பேராசிரியர் சேதுப்பிள்ளை அவர்கள்,

> "பேராசிரியர் கணபதிப்பிள்ளை தலைசிறந்த ஆராய்ச்சியாளர், மொழி ஒப்பிலக்கண விற்பன்னர், வடமொழி வல்லுனர், தமிழ்ப் பேரறிஞர், கற்பனைக் களஞ்சியம், கலையருவி, உத்தமர், இவரையிட்டுத் தமிழ் உலகம் பெருமைப்படவேண்டும்"
>
> (சண்முகசுந்தரம். அ., 1974, ப. 18)

இவ்வாறு கூறியமை இங்கு குறிப்பிடத்தக்கது. பேராசிரியரது நூல்களை நாடகம், கவிதை, பண்பாடு, நாவல் என்ற நான்கு வகையில் அடக்கலாம். பேராசிரியரது இவ்விலக்கியங்களிற்கு முன்பு இலக்கியங்களின் பொருளாகப் புராண இதிகாசத் தத்துவ போதனைகளே இடம்பெற்றன. இதற்குமாறாகப் பேராசிரியர் தனது இலக்கியங்களிற்குப் பொருளாக மக்களின் வாழ்க்கைப் போராட்டங்கள், சிந்தனைகள், முரண்பாடுகள், பண்பாடு என்ற அம்சங்களைப் பொருளாகக் கொண்டு எழுதியவராகின்றார். மொழி நடையிலும் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தியவர் ஆகின்றார்.

கவிதை பற்றிய ஆய்வு

மனித வாழ்விற் காணப்படும் சுவையான நிகழ்ச்சிகளையும் அவற்றின் விளைவாக உள்ளத்திலே தோன்றும் உணர்வுகளையும் சுருங்கிய முறையில் வெளிப் படுத்தும் சாதனமாகக் கவிதை அமைகின்றது. பேராசிரியர் தனது உள்ளத்திலே எழுந்த உணர்வுகளையும் சிந்தனைகளையும் மோதல்களையும் எடுத்துக் கூறுவதற்கு ஏற்ற சாதனமாகவே கவிதையைத் தேர்ந்தெடுத்தார். இவற்றின் பிரதிபலிப்பாகவே தூவுதும் மலரே, காதலியாற்றுப்படை என்பன அமைந்திருக்கின்றன. உள்ளத்து உணர்வுகளைப் பாடல்களில் சொல்லோவியமாகத் தீட்டுவதில் ஆத்ம திருப்தி கண்டவர் பேராசிரியர் அவர்கள். இதனைத் தூவுதும் மலரே என்ற பாடல் தொகுதி முகவுரையிலே பின்வருமாறு அவரேகூறுகிறார்.

"இக்காலத்தில் நாவல் சிறுகதை முதலியவற்றின் மூலம் சமுதாய ஊழல்களையும் ஒழுக்க நெறியையும் எழுத்தாளர் உலகத்தார்க்குத் துலக்கிக் காட்டுவதுபோல நானும் சமுதாயத்திற் காணும் உயரிய பண்புகளையும் மட்டுமன்றித் தாழ்ந்த நிலைகளையும் இன்ப துன்பங்களையும் பாட்டிலே தீட்டிக் காட்டுவதில் உள நிறைவு கண்டேன். பாட்டின் மூலம் அழலாம்.சிரிப்பிலும் பார்க்க அழுதலே கூடிய சுவையைக் கொடுக்கும். என் வாழ்வில் நகையும் அழுகையும் அதிகமாய் எழுந்த காலங்களில் தீட்டி வைத்தவையே இப்பாடல்கள். இவை எனக்கு இன்பத்தை ஊட்டின. இன்றும் ஊட்டுகின்றன."

(கணபதிப்பிள்ளை. க., 1950, தூதும் மலரே முன்னுரை)

என்று குறிப்பிடுகின்றார். பேராசிரியரது கவிதைகள் புதிய முகத்துடன் புதுவழியிற் செல்கின்றன. இச்செய்யுட்கள் இக்காலக் கவிதைகள் என்ற குறுகிய வரம்புக்கு உட்படாதனவாகத் தோன்றுகின்றன. பாடலின் அடியெல்லைகளால் மட்டுமன்றிச் சொல்லாட்சியினாலும் இச் செய்யுட்கள் இக்காலக் கவிதைகளினின்றும் வேறு படுகின்றன.

அறிவை வளர்க்கும் பெரியோர்களையும் பேராசிரியர் இதில் பதிவு செய்துள்ளார். தனக்கு அறிவுரை கொடுத்தும் ஏனையோருக்கும் அறிவு கொடுத்து வளர்த்த பெருந்தகையாளன் குமாரசாமிப் புலவர் பற்றிக் குறிப்பிடுகின்றார்.

குருசீடபரம்பரையை இதன் வாயிலாகப் புலப்படுத்துகின்றார்.

"ஆரியந் தன்னினளப்பருமாக்கடல் அருந்தமிழ்க் கலைக்கோர்
வரம்பாயுயர்ந்தோன் வயங்கு செந்நாவின் வகையில் புல
வோன் ஆகமபண்டிதன் அருமறைக் குருமணி முத்துக்குமாரசுவா
மியென்னும் பேர் மூதறிவாளன் முறையுடனடையும் மாணவர்
தமக்கு வளம்பெறு முகில்போற் போத மெய்க்கலைகள்
பொழிந்திடும் வள்ளல் மாசிலந்தணன் மாப்பெருந் தோன்றல்
சிவனடி பரசுந் தவநெறியாளன் கடையேனையும் பொருளெனக்
கருதியறிவு கொளுத்தி ஆட் கொள்ளும் பெரியோன்."

(கணபதிப்பிள்ளை. க., 1950, காதலியாற்றுப்படை, ப. 16)

என்னும் பகுதியில் அவரின் குருபக்தி தெள்ளிதிற் புலப்படுகின்றது. இதன் வாயிலாக இத்தகைய பெரியோர்களினால் மாணவர்களின் அறிவுக்கடல் பெருகிறது என்பது புலப்படுகின்றது.

சங்ககால ஆற்றுப்படை மரபினைத் தழுவிய ஆற்றுப்படையாக காதலியாற்றுப் படை அமைகின்றது. ஆற்றுப்படை என்பது வழிப்படுத்தல், வழிகாட்டல் எனப்படுகின்றது. மன்னன், குறுநிலத் தலைவன் ஒருவனிடம் பரிசில் பெற்றுவரும் பாணர், பொருணர் என்போர் தாம் பெற்ற பெரும் வளத்தை ஏனையோரும் பெற வேண்டும் என்ற நோக்கோடு அவர்களை அம்மன்னனிடம் அல்லது தலைவனிடம் வழிப்படுத்துவதை சங்ககால ஆற்றுப்படை இலக்கியங்கள் சுட்டுகின்றன. இதிலிருந்து வேறுபட்டதாக பக்தன் பக்தனுக்கு முருகனின் அடிகளை ஆற்றுப்படுத்துவதாகத் திருமுருகாற்றுப்படை அமைகின்றது. சங்ககாலத்திற்குப் பின்னர் வழக்கொழிந்த இவ்விலக்கிய வகை இருபதாம் நூற்றாண்டில் பேராசிரியரால் புதுப்பெயரில் புதுப்பொலிவுடன் கையாளப்படுவதை அவதானிக்கலாம். காதலி யொருத்திக்கு அவளது காதலன் உறையும் இடத்தை அடைய வழிகாட்டுவதாக இக் காதலியாற்றுப்படை அமைகின்றது. இவ்விலக்கிய வகையைப் பேராசிரியர் தமது காலப் பகுதியின் வடமராட்சிப் பிரதேச சமூக பண்பாட்டு அம்சங்களைப் பதிவு செய்யும் நோக்கில் பயன்படுத்துகின்றார்.

மரபு சார்ந்த இலக்கிய வடிவத்தில் ஆசிரியப்பா என்ற யாப்புடையதாக இக்காதலியாற்றுப்படை அமைகின்றது. பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்கள் "காதலியாற்றுப் படையிலே ஆராய்ச்சியாளருக்கு உரிய தரவுகளும் உணர்வு அனுபவம் நிரம்பிய ஒருவரின் அவதானிப்புக்களும் ஒருங்கே காணப்படுகின்றன" என்று கூறியமை இங்கு குறிப்பிடத்தக்கது. அனு "மக்கள் வாழ்க்கையை முழுப் பிரதி பலிப்பாகக் கொண்டு யாழ்ப்பாண மண்வளத்தின் பூரணத்துவமான நிறையழகை உணர்த்தி நிற்கும் ஒரு இலக்கியம் காதலியாற்றுப் படையைப் போன்று தோன்றி யிருக்கவில்லை" என்று கூறியமையும் இங்கு மனங்கொள்ளத்தக்கது. தமிழ் நாட்டில் ஆற்றுப்படை இலக்கியம் தோன்றியது போன்று ஈழத்திலும் பேராசிரியரால் படைக் கப்பட்ட இவ்வாற்றுப்படை ஈழத்திற்குப் பெருமைதருவதாகவே அமைகின்றது.

"தீவெட்டிக்கள்ளர்" என்ற கவித்தொகுதியானது உடையார், விதானை, மணியம் முதலாய அரசவேலை பார்ப்போருக்கும் அரசரோடொன்றி உழைப்பவர்களையும் கொடிய வழிகளில் துன்புறுத்திய தீவெட்டிக்கள்ளரின் கதையைக் கூறுவதாக அமைகின்றது. இக் கவிதைத் தொகுதி வடமராட்சியின் மண்வாசனையை எடுத்துக் கூறுவதாக அமைகின்றது.

உடையார்,விதானை,மணியம் முதலியோருக்கும் அரசோடொன்றி உழைப் போருக்கும் தீவெட்டிக்கள்ளர் செய்த கொடுமையை ஆசிரியர் பின்வருமாறு கவிதையில் குறிப்பிடுகிறார்.

"கொடிய வழிகளாற் கொடுமை செய்தனர்
நாட்டில் அமைதி இலாதவாறு
கொள்ளையடித்தும் கொலைபல புரிந்தும்
ஆளவிடாது விளைத்தனர் குழப்பம்
அத்தகைக் கொடிய கூட்டமொன்று
மயிலியதன்னை மண்டகக் கிடங்கை
இருப்பிடமாக இருந்துகொண்டு
வல்லை தன்னில் வழிபறிகொள்ளை
நடத்தி வந்த வன்பெரு தீவெட்டிக்
கள்ளர் கூட்டம் கள்ள வழிகளால்."

(கணபதிப்பிள்ளை. க., 1950, தூ தும் மலர், ப. 89)

எனத் தொடங்கும் வரிகளில் வல்லைவெளியை இருப்பிடமாகக் கொண்டு அவ்வழியால் போவோருக்கும் நெஞ்சு நடுங்கும் வகையில் கொடுமைகள் புரிந்த கந்தன், ஆட்கொல்லி நாகன் செயலை ஆசிரியர் இதில் எடுத்தியம்புகின்றார்.

தீவெட்டிக்கள்ளர், உடையார் வீடுகளுக்கு நள்ளிரவில் தீவெட்டி ஏந்திச் சென்று அவர்கள் பொருள்களை கொள்ளையடிப்பதையும் அவர்கள் பொருட்களை மறைத்து வைத்திருப்பின் விரலைத் தீவெட்டியால் சுடுவதனையும் ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

இவ்வாறு தீவெட்டிக் கள்ளரின் கொடிய செயலைத் தான் பார்த்த அனுபவித்த செயல்களைப் பாத்திரவார்ப்பினூடாகப் புலப்படுத்துகிறார். சமுதாயத்தில் நிகழும் கொடிய செயல்களை உலகுக்கு எடுத்துக் கூறிச் சீர்திருத்தும் நோக்கம் பேராசிரியருக்கு இருந்தது என்பது வெளிப்படையாகின்றது.

தூவுதும் மலரே என்ற கவிதைத் தொகுதி சமுதாயத்தில் நிலவும் அவலங்களையும் கொடுமைகளையும் எடுத்தியம்புவதாக அமைகின்றது. அருவி பாய்வது போன்ற தெளிந்த நடையாகக் கவிதை பாய்கின்றது. கதை கூறும் செய்யுட்களாக இவை அமைகின்ற விதத்தில் புதுமையான போக்கில் அமைகின்றன எனலாம். இத்தகைய கதைப் பாடல்களை ஆங்கிலத்தில் "Narrative Poems" என அழைப்பர். தூவுதும் மலரே ஈழத்துக் கவிதை உலகில் சிறந்த ஆக்கமாகத் திகழ்கின்றது. என்பது வெளிப்படையாகின்றது.

ஈழத்துக் கவிதை வரலாற்றிலே சமூக சிந்தனையின் தோற்றத்தினை சுப்பையாப் புலவரின் கனகி புராணத்திலும் சரவண முத்துப்பிள்ளையின் தத்தைவிடுதூது என்ற கவிதை ஆக்கங்களிலும் காணலாம். இச்சமூக சிந்தனையின் வளர்ச்சியாகவே பேராசிரியரது இக்கவிதைத் தொகுதியும் அமைகின்றது எனலாம். சீதனக்காதை, தீவெட்டிக் கள்ளர் என்ற கவிதைப் பகுதிகள் சமுதாயத்தில் நிகழும் போராட்டங்களையும் சிந்தனைகளையும் அப்படியே பிரதிபலிப்பனவாக அமைகின்றன. நவீன ஆக்க இலக்கியகாரரது நோக்கின்படி சமுதாயத்தைப் பிரதிபலிப்பதுடன் அதற்கான

தீர்வையும் ஆக்க இலக்கியகாரர் கூறவேண்டும் என்ற கருத்து நிலவுகின்றது. இந்த வகையில் நோக்கும்போது பேராசிரியர் இவற்றில் அவற்றுக்கான தீர்வைக் கூறவில்லை. எனவே இவரை ஒரு விபரணக் கவிஞன் என்றே கூற வேண்டும். எனினும், ஈழத்துக் கவிதை வரலாற்றில் சமூக சிந்தனையின் வளர்ச்சியைப் புலப்படுத்தும் செய்யுள்களை இவருடைய கவிதைத் தொகுதியிலே காணலாம். அருவி பாய்வது போன்ற தெளிந்த நடையாக அமைகின்றது. ஈழத்துக்கவிதை வரலாற்றிலே பேராசிரியரது காதலியாற்றுப்படை, தூவுதும் மலரே என்ற கவிதை ஆக்கங்கள் சிறந்தே விளங்குகின்றன எனலாம்.

நாவல்

நாவல் என்பது நீண்டதொரு காலத்தையும் குறிப்பிட்ட கதை மாந்தர்களின் முழு வரலாற்றையும் சித்திரிக்கின்றது. ஈழத்து நாவல் இலக்கிய வளர்ச்சியில் மொழி பெயர்ப்பும் தழுவல் முயற்சிகளும் நாற்பதுகளில் மேற்கொள்ளப்பட்டன. நாவல்கள் சுயமாகப் படைப்பதற்கு இவை வழிகாட்டிகளாக அமைகின்றன. இந்த வகையிலே பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை அவர்களும் இந்தோ ஐரோப்பிய மொழிகளிற் புலமை பெற்றிருந்தமையால் தழுவல் மொழிபெயர்ப்பு நாவல்களைப் படைத்தார். ஜேர்மனிய நாவலாசிரியர் தியோடர்கதாம் எழுதிய இம்மென்சே நாவலின் தழுவலாக அமைந்ததே பூஞ்சோலையாகும். அபூ என்பவர் பிரெஞ்சு மொழியில் எழுதிய இரட்டையர் என்னும் நூலைத் தழுவி எமது நாட்டு மக்களைப் பற்றிய ஒரு கற்பனைச் சித்திரமாக அமைந்த நாவல் வாழ்க்கையின் வினோதங்களாகும். பேராசிரியர் தான் பிறந்த நாட்டின் சமூக சிந்தனைகளையும் உணர்வோட்டங்களையும் பதிவு செய்யும் கருவியாக இந்நாவலைக் கையாண்டார்.

பேராசிரியர் நாவலாசிரியர் மட்டுமல்லாமல் சிறுகதையிலும் தேர்ச்சி பெற்றிருந்தார் என்பதை நீரரமங்கையர் என்ற சிறுகதை புலப்படுத்துகின்றது. அந்நேசன் என்பவரின் மோகினிச்சிறுமி என்னும் கதையைத் தழுவி எமது நாட்டுச்சிறுவர் சிறுமியருக்கு ஏற்றமுறையில் அமைந்ததே நீரரமங்கையர் என்னுங் கதையாகும். நீருலகத்திலும் நிலவுலகத்திலும் வாழும் மனிதர்களின் சிக்கல்களையும் அபிலாசைகளையும் முழுமையாகச் சித்திரிக்கும் கற்பனைச் சித்திரமாக அமைகின்றது.

பேராசிரியர் இச்சிறுகதையில் கதைக்கரு, கதைப்பின்னல், பின்புல வர்ணனை, உரையாடல், பாத்திரப்படைப்பு என்பவற்றை சிறுகதை இலக்கண அமைதிக்கு ஏற்ப சிறப்புற அமைத்துச் செல்கின்றார்.

பேராசிரியர் நாவல் சிறுகதை நூல்களையும் எழுதி ஈழத்து இலக்கிய வரலாற்றில் தனக்கென ஓர் இடம்பிடித்திருக்கிறார் என்றே கொள்ள வேண்டும். பூஞ்சோலை, வாழ்க்கையின் விநோதங்கள் என்ற இரு நூல்களையும் நீரரமகளிர் என்ற சிறுகதை யையும் எழுதியுள்ளார். பூஞ்சோலை ஜேர்மனிய நாவல் ஆசிரியர் தியோடர்ககாம்

எழுதிய இம் மென்சே நாவலின் தழுவலாக அமைந்துள்ள போதிலும் தமிழ் நாட் டிற்கு ஏற்ற முறையில் கதைப் போக்கைச் கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இத்தகைய கருத்தை அவரே தனது முகவுரையில்

> "தமிழ் நாட்டிற்கு ஏற்ற முறையில் கதைப்போக்கு முதலியவற்றைக் கூட்டியும் குறைத்தும் மாற்றியும் இந்நூலை வரைந்துள்ளோம்"
>
> *(கணபதிப்பிள்ளை. க., 1953, பூஞ்சோலை, முன்னுரை)*

எனக் குறிப்பிடுவதிலிருந்து பேராசிரியர் இந்த நாவலில் கதைப்பொருள், கதைப்பின்னல், பின்னணி, பாத்திரப் உரையாடல் என்பனவற்றை வளர்த்துச் செல்கிறார். இவரது நாவலில் உரையாடல் நாடகத் தன்மைக்கு இட்டுச் செல்கின்றது. சிறந்த நாவலில் நாடகத்தன்மை இருத்தல் வேண்டும். இத்தகைய சிறந்த பண்புகளைக் கொண்ட நாவலாக பூஞ்சோலை உள்ளது. அபூ என்பவர் பிரெஞ்சு மொழியில் எழுதிய இரட்டையர் என்னும் நூலைத் தழுவி எமது நாட்டு மக்களைப் பற்றிய அவர்களின் மன உணர்வுகளைச் சித்திரிக்கும் நாவல் வாழ்க்கையின் விநோதங்கள் ஆகும். பேராசிரியர் நாவல் எழுதத் தொடங்கிய காலத்திலும் அதற்கு முந்தியும் தழுவல் நாவல்கள் ஈழத்தில் எழுந்தன. ஜேர்மனிய நாவலாசிரியர்களான வில்ஹெல்ம் ஸ்மித், தோமஸ் மான் ஆகியோரது இரு படைப்புக்கள் அ. செ. முருகானந்தம், கோணாசலம் ஆகியோரால் முறையே போட்டி (1941), மனவிகாசம் (1945) ஆகிய தலைப்புக்களில் மொழிபெயர்க்கப்பட்டன. இவற்றுடன் ஒப்பிட்டு நோக்கும்போது பேராசிரியரது நாவல் இலக்கியங்களும் சிறந்து விளங்குகின்றன. இக்காலப்பகுதியில் தமிழ் நாட்டிலும் ஈழத்திலும் தாம் பிறமொழிகளில் கற்றவற்றைத் தமிழில் படைக்க வேண்டும் என்று நாவலாசிரியர்கள் முனைந்தனர்.

நாடகம்

இதுவரை நாடகங்கள் புராணம், தத்துவம் போன்ற அம்சங்களே கதைப் பொருள் மரபாகக் கொண்டு நாடகங்கள் நிலவிவந்தன. பேராசிரியர் இதனை மாற்றி தமது நாடகங்களில் யாழ்ப்பாணத்தில் சாதாரண மாந்தர்கள் மத்தியில் காணப்படும் சமூக அம்சங்கள், வாழ்க்கை முறைகளைக் கதைப்பொருளாகக் கொண்டார். பொருளோ பொருள், தவறான எண்ணம் என்ற இரு நாடகங்களை உள்ளடக்கிய இரு நாடகமும், உடையார்மிடுக்கு, முருகன் திருகுதாளம், கண்ணன் கூத்து, நாட்டவன் நகர வாழ்க்கை என்னும் நான்கும் உள்ளடங்கிய நானாடகமும் சமூக நாடகங்களாகும்.

சமுதாயத்தில் நிகழும் போலி வாழ்க்கை, அதனால் ஏற்படும் விளைவு, அரசியல் நிலை, சமுதாய நிலை, சாதிப்பாகுபாடு என்பவற்றைப் பேராசிரியர் நாட்டவன் நகர வாழ்க்கை நாடகத்தினூடாகச் சுட்டிக்காட்டுகின்றார்.

பேராசிரியர் வரலாற்று நாடகம் எழுதி ஏனைய நாடகாசிரியர்களுக்கு வழி காட்டியாகவும் முன்னோடியாகவும் திகழ்கின்றார். பேராசிரியர் சங்கிலி நாடகத்தில்

தமிழரின் வரலாறு முழுவதையும் தீர்க்கதரிசனமாக முன்னரே கூறியுள்ளார். இந்நாடகம் எழுதப்பட்டதன் நோக்கம் தேசிய இனம் நாட்டுப்பற்று என்பனவற்றை மக்களுக்கு ஊட்டுவதற்கே எனலாம். இதைப் பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்கள் பின்வருமாறு கூறியுள்ளார்.

> "தமிழ் பேசும் மக்களும் தம்மொழி, பண்பாடு, நாடு, சமயம் ஆகியவற்றின் பெருமை களையும் உணரத் தலைப்பட்டார்கள். இந்நிலையில் அம்மக்களுக்குத் தமிழ்ப் பற்று நாட்டுப்பற்று வீர உணர்வு ஒற்றுமை உணர்வு போன்றவற்றை ஊட்டுவது அவசியம் என்பதைக் கற்றோரும் மற்றோரும் கண்டனர். இந்நோக்கத்தினை நிறைவேற்றுவதற்கு ஏற்றதொரு வகையாக யாழ்ப்பாணத் தரசன் சங்கிலியின் வீர வரலாற்றைக் கூறும் இந்நாடகத்தினை பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை அவர்கள் 1952ம் ஆண்டில் எழுதினார்"
>
> (வித்தியானந்தன். சு., சங்கிலி நாடகம், முன்னுரை)

எனப் பேராசிரியர் கூறுவது இதனை நன்கு புலப்படுத்துகின்றது. பாரதியார் நாட்டுப்பற்று, விடுதலை வேட்கையை நோக்காகக் கொண்டு பாஞ்சாலி சபதத்தை இயற்றியது போன்று பேராசிரியரும் இந்நாடகத்தை இயற்றினார் எனலாம். ஷேக்ஸ்பியர், ஜூலியஸ் சீசர், ஹென்றி, முதலாம் றிச்சேட், இரண்டாம் றிச்சேட் போன்ற சரித்திர சம்பந்தமான நாடகங்களை எழுதினார். ஜூலியஸ் சீசருடன் ஒப்பு நோக்கத்தக்கதாக பேராசிரியரது சங்கிலி நாடகம் அமைகின்றது.

சங்கிலி யாழ்ப்பாண இராச்சியத்தைப் பரிபாலித்த வரலாற்றைக் கூறுவதாக இந்நாடகம் அமைகின்றது. சுவாமி ஞானப்பிரகாசர் (Tamil Kings of Jaffna), செ. இராசநாயகம் (The History of Ancient Jaffna), ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை (யாழ்ப்பாணச் சரித்திரம்) போன்ற வரலாற்று ஆசிரியர்கள் சங்கிலியின் துட்டத்தனங்களை மிகுதியாகக் காட்டி அவனின் நாட்டுப்பற்றையும் வீரத்தையுமே தம் வரலாற்று நூல்களில் குறிப்பிடுகின்றனர். இதற்குமாறாகப் பேராசிரியர் சங்கிலியைத் தன்மான வீரனாகக் காட்டுகின்றார்.

ஷேக்ஸ்பியருடைய நாடகங்களில் ஹம்லெற், லீயர், மாக்பெத், ஒதெலோ போன்ற பாத்திரங்கள் மிகச் சிறந்த முறையில் அமைக்கப்பட்டுள்ளன. இதேபோன்று பேராசிரியரும் சங்கிலியை மாபெரும் வீரனாகவும் நீதி தவறாது ஆளும் இலட்சிய புருசனாகவும் படைத்திருக்கின்றார். மன்னாரில் சங்கிலியன் படை பறங்கியரின் படைகளை முறியடித்தது. பறங்கியரின் நாற்பத்தெட்டுக்கப்பலில் நாற்பத்து மூன்று கப்பல்கள் சங்கிலியன் படையால் நிர்மூலமாக்கப்பட்டன. சண்டையிற் பெரிய சிங்கம் சங்கிலி என அந்தோனி என்ற பாத்திரம் வாயிலாகப் பேராசிரியர் காட்டுகிறார். மிகுந்த வீரமுள்ளவன் எனவும் தந்திர புத்தியுள்ளவன் என்றும் அவனது ஆளுமையைக் காட்டுகின்றார்.

நாடகமைப்பிலே முதல் சூத்திரதாரன் நடிகை (சூத்திரதாரன் மனைவி) ஆகிய இருவரும் முதல் தோன்றி நாடகம் இவ்வாறு தோற்றம் பெறுகின்றது என்று அறிமுகம்

செய்து வைப்பதாகப் பேராசிரியர் இந்நாடகத்தில் அமைக்கிறார். இந்நாடகம் நான்கு அங்கங்களாக உள்ளது. ஏனைய நாடகங்களில் உள்ளதுபோல காட்சியமைப்பை நாடக மேடையை இதில் காணமுடியாது. இந்த நாடகம் படிப்பதற்கு உகந்தது. மிகுந்த சுவை பயப்பதாக உள்ளது. நடிப்பதை விட படிப்பதற்கே உரியது எனலாம். எனினும் "மாணிக்க மாலை நாடகத்தில் வரும் அரசவைக் காட்சியை மட்டும் 1969 இலே பேராதனையில் இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ் நாடக மன்றத்தினர் நடிப்பதற்காகத் தேர்ந்தெடுத்தனர். அவ்வாண்டிலே பொம்மைவண்டி, சகுந்தலை என்னும் நாடகங்களுடன் போட்டியிட்டுப் பரிசைத் தட்டிக் கொண்டது இந் நாடகம்" (சிவானந்தன், இ., 1979, ப. 54) என்று இ.சிவானந்தன் கூறுவது இங்கு குறிப்பிடத்தக்கது.

செந்தமிழ் நடை விரவியதாக இந்நாடகம் அமைகின்றது. பேராசிரியரின் கவித்திறனையும் சொல்லாட்சியையும் இந்நாடகத்தில் வரும் பாடல்கள் நன்கு உணர்த்துகின்றன.

ஈழத்து நாடக வரலாற்றில் பேராசிரியரது நாடகங்கள் முன்னோடியாகவும் வழிகாட்டியாகவும் அமைவதோடு நாடக வரலாற்றில் இவற்றுக்குத் தனியிடம் உண்டு என்பதும் பெறப்படுகின்றது.

தமிழில் சிறுகதை, நாவல்களைவிட எண்ணிக்கையில் குறைவாகவே நாடகங்கள் தோன்றுகின்றன. ஒரு கதைக்கு நாடக உருவமும் நாடகத் தன்மையும் கொடுப்பதற்கு மிகுந்த கற்பனை ஆற்றல் வேண்டும். உணர்ச்சியையும் கதைப்போக்கையும் நாடகப் பாத்திரங்கள் வாயிலாகக் காட்டுவது கடினமானது. நாடக அமைப்பு எல்லோருக்கும் கைவந்ததல்ல. இத்துறையிலே நன்கு தேர்ச்சி பெற்றவர் பேராசிரியர் கணபதிப் பிள்ளை அவர்கள். சமூக நாடகங்களாக ஆறு நாடகங்களும் வரலாற்று நாடகம், தழுவல் நாடகங்களுமெழுதி ஏனைய நாடக ஆசிரியருக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்தார். 'பொருளோபொருள்,' 'தவறான எண்ணம்' என்ற இரு நாடகமும், உடையார் மிடுக்கு, கண்ணன் கூத்து, முருகன் திருகுதாளம், நாட்டவன் நகர வாழ்க்கை என்ற நான்கு நாடகங்களும் சமூக நாடகங்களாகும். ஈழத்து நாடக வரலாற்றில் முதன் முதல் சாதாரண மக்கள் மத்தியில் பயிலப்படும் பேச்சு மொழியினைக் கையாண்டு நாடகங்கள் எழுதினார். பேராசிரியர் பொதுவாக யாழ்ப்பாணத் தமிழிலும் வடமராட்சியில் பருத்தித்துறைத் தமிழிலும் பயின்ற பேச்சு மொழியிலே நாடகம் எழுதி வெற்றியும் கண்டார். இதுபற்றிக் கூறும்போது பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்கள் "யாழ்ப்பாணப் பேச்சு வழக்கினை நாடகத்திற் புகுத்தி நாடகப் பாத்திரங்களுக்கு இயற்கைத் தன்மையினையும் யாழ்ப்பாணப் பேச்சு மொழிக்கு இலக்கிய அந்தஸ்தையும் வழங்கியுள்ளார் ஆசிரியர். இது மொழிக்கு தமிழ் நாடகத்துக்குச் செய்த புதுமை எனலாம்" (சண்முகதாஸ், அ., 1968, இளங்கதிர்) என்று கூறியமை இங்கு குறிப்பிடத்தக்கது. இவர் மொழியியல் வல்லுனர் ஆகையால் இம் மாற்றத்தை திறம்படி வகுத்துக்காட்டினார் எனலாம். இதனைப் பேராசிரியர் தில்லைநாதன் அவர்கள் பின்வருமாறு சுட்டிக் காட்டினார் எனலாம்.

"நகைத்த இராமானுஜம் சொன்னார் பேச்சுவழக்கைக் கையாள்வது அவ்வளவு சுலபம் அல்ல. ஒரு கணபதிப் பிள்ளையால் செய்ய முடிகிறதென்று எல்லோருக்கும் முடியுமா? அப்போதுதான் பேராசிரியர் கணபதிப் பிள்ளையின் பேச்சு வழக்கு நாடகங்களின் அருமையும் அவரது மொழியியற் புலமையும் செவ்விதில் விளங்கிற்று"

(தில்லைநாதன். சி., தினகரன் நாடகவிழா மலர்)

இவ்வாறு கூறியமை இங்கு மனம் கொள்ளத்தக்கது. வரலாற்று நாடகம் (சங்கிலி) எழுதி ஏனைய ஆசிரியருக்கு வழிகாட்டியாகவும் முன்னோடி யாகவும் திகழ்ந்தார். தழுவல் நாடகம் எழுதி (மாணிக்க மாலை) நாடகத் தோற்றத்திற்கு வழிவகுத்தார். பேராசிரியர் நாடகத்துறையில் ஈடுபட்ட காலப்பகுதியில் ஈழத்தில் மு. இராமலிங்கத்தின் அசோக மாலா (1943), சு. செல்வநாயகத்தின் காதற்கோபுரம் (1946), அப்பாஸின் துரோகி (1951), பண்டிதர் சோ. இளமுருகனின் தமயந்தி திருமணம் (1955), இலங்கையர்கோனின் மாதவி மடந்தை (1958) முதலிய நாடக நூல்கள் வெளிவந்தன. இவற்றோடு பேராசிரியரது நாடக நூல்களை ஒப்பிட்டு நோக்கும்போது இவரது நாடகங்கள் சிறந்து விளங்குகின்றன என்பதில் சந்தேக மில்லை.

ஈழத்து வாழ்மக்களின் பண்பாட்டுப் பிரதிபலிப்பு

ஈழத்து வாழ் மக்களின் பண்பாட்டையும் ஒரு நூலாக எழுதி ளெளியிட்டார். இந்நூல் ஈழத்து வாழ்வும் வளமும் என்ற பெயருடன் விளங்குகின்றது. ஈழத் தமிழரிடையே பிரதேசத்திற்குப் பிரதேசம் விளங்குகின்ற பழக்கவழக்கங்களும், வாழ்க்கை முறைகளும் இந்நூல் காணப்படுகின்றன. இவற்றை ஒரு மானிடவிய லாளன் சமுதாயத்தை எவ்வாறு நோக்குவானோ அவ்வாறே பேராசிரியரும் ஈழத்து மக்களின் வாழ்க்கை முறைகளை ஆய்ந்து அறிந்து விபரணஞ் செய்வதாகவே இந்நூல் அமைகின்றது. ஈழத்து வாழ்வையும் வளத்தையும் சொந்த நாட்டவருக்கு உணர்த்துவது மட்டுமன்றி பிற நாட்டவர்க்கும் உணர்த்துவதாக இந்நூல் விளங்கு கின்றது. பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை தமிழ்நாட்டில் தமிழர் பண்பாடு என்ற ஒரு நூலை எழுதியுள்ளார். பேராசிரியரும் இதே போன்று ஈழத்தமிழர் பண்பாட்டைக் களமாகக் கொண்டு இந்நூலை எழுதியது ஈழத்திற்குப் பெருமை தருவதாகவே அமைகின்றது.

ஈழத்தவர் வாழ்க்கையை மட்டுமன்றி அவர்தம் வரலாற்றையும் தாம் எழுதிய இலங்கை வாழ் தமிழர் வரலாறு என்ற சிறுநூலில் ஆராய்ந்துள்ளார். ஈழத்தமிழர் வரலாற்றை முழுமையாக எழுதும் முயற்சி இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. குறுகிய காலப் பகுதிக்குரிய அல்லது பிரதேசத்திற்குரிய நூல்களே வெளிவந்துள்ளன. பேராசிரியர் இந்நூலில் முன்பு வெளிவந்த நூல்களின் கருத்துக்களையும் செய்திகளையும் சுருக்கமாகவும் தெளிவாகவும் ஒரு ஒழுங்கான முறையிலும் அமைத்துள்ளமையே அதன் சிறப்பாகும். ஆசிரியர் வரலாற்றாராய்ச்சியாளர் அல்லாதபோதும் அவர் வரலாறு பற்றி ஒரு நிதானமான போக்கினையும் வரலாற்று

மூலங்கள் பற்றி அறிவியல் அடிப்படையிலான சிந்தனையுங் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. ஈழத் தமிழர் இந்நூற்றாண்டின் பிற்பகுதியிலே தமது வரலாற்றினைப் பற்றி ஆழமாகச் சிந்திப் பதற்கு பேராசிரியரின் இந்நூல் ஒரு தூண்டுகோலாய் அமைந்தது எனலாம்.

நிறைவுரை

பேராசிரியர் ஈழத்து இலக்கிய வரலாற்றில் சிறந்த நாடகாசிரியராக மட்டும் கணிக்கப்படுகின்றார் என்று பொதுவாகக் கொள்ளப்படுகின்றது. இதனைச் சொக்க லிங்கம் வேறு நூல்களை ஆக்கியிருப் பினும் பேராசிரியர் கணபதிப்பிள்ளையவர் களின் பெயர் அவர் ஒரு சிறந்த நாடகாசிரியர் என்ற வகையிலேதான் தமிழ் இலக்கிய வரலாற் றிலே நிலைத்து நிற்கும் என்பது எனது கருத்து என்று கூறுகின்றார்.

இவர் சிறந்த நாடகாசிரியர் என்பது பெறப்படுகின்றது. ஆனால் இவரது நாடகங்களுடன் ஏனைய நூல்கள் வைத்து எண்ணப்படாவிட்டாலும் சிறந்த படைப்புகள் என்றே நாம் கொள்ள வேண்டும். ஈழத்து இலக்கிய வரலாற்றில் கவிதை, நாவல், சிறுகதை, பண்பாடு, வரலாறு, நாடகம் எனப் பல்துறையிலும் ஈடுபட்டு ஏனையோருக்கு வழிகாட்டியாகின்றார். ஈழத்து இலக்கிய வரலாற்றில் இவரது பெயர் நாடக வரலாற்றில் சிறப்பிடம் பெற்ற அதேவேளைகவிதை, நாவல், சிறுகதை, பண்பாடு, வரலாறு என்பவற்றிலும் நிலைத்து நிற்கும் என்பதாகும். ஈழத்து இலக்கிய வரலாற்றிலே பேராசிரியரது நாடகம், கவிதை, நாவல், சிறுகதை, பண்பாடு, வரலாறு என்ற வகையிலே அமைந்த நூல்கள் சிறப்பிடம் பெற்று திகழ்கின்றன என்பது குறிப்பிடத்தக்கவொன்றாகும். தமிழியல் ஆய்வில் பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை அவர்களின் பங்கு விதந்து குறிப்பிடத்தக்கது. மேலும் பேராசிரியரது கல்வெட்டுக்கள் பற்றிய வாசிப்புகள் ஆய்விக்குட்படுத்தப்பட வேண்டியுள்ளன.

உசாத்துணை நூல்கள்

1. கணபதிப்பிள்ளை, க., (1950), காதலியாற்றுப்படை, திருமால் அச்சகம், சுன்னாகம்.
2. கணபதிப்பிள்ளை, க., (1950), துவுதும் மலரே, கலைவாணி அச்சகம், யாழ்ப்பாணம்.
3. கணபதிப்பிள்ளை, க., (1953), பூஞ்சோலை, கோமியோபதி பிறஸ், கும்பகோணம்.
4. கணபதிப்பிள்ளை, க., (1945), வாழ்க்கையில் விநோதங்கள், சாதரா விலாஸ் பிரஸ், கும்பகோணம்.
5. கணபதிப்பிள்ளை, க., (1950), நீரரமங்கையர், அமெரிக்கா இலங்கை மிஷன் அச்சியந்திரசாலை, தெல்லிப்பளை.
6. சண்முகதாஸ். அ., (1968), ஈழத்து நாடக வரலாற்றில் ஒரு தமிழ்ப் பேராசிரியர், இளங்கதிர், பேராதனை.
7. சண்முகசுந்தரம்., (1974), கலையருவி கணபதிப்பிள்ளை சில நினைவுகள், கலைப்பெருமன்றம், தெல்லிப்பளை.
8. தில்லைநாதன், சி., நாடகத் தமிழும் நமது துறையும், தினகரன் நாடக விழா மலர்.